

திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தால் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டு, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட, புதிய கழக உறுப்பினர் அட்டைகளை, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் கோ.கண்ணன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, எஸ்.பன்னீர்செல்வம், பிரியா ப.விஜயரங்கன், ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, இரா.ராஜேந்திரன், பா.ராமஜெயம், சி.கே.அன்பு, ப.முருகையன் ஆகியோர் உள்ளனர்.

### திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!



திருப்பூர், செப். 30 -

திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. திருப்பூர் தெற்கு மாவட்டத்திலுள்ள காங்கேயம், தாராபுரம், மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நிர்ணயிக்க ப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும். புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும். தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற Replacement id Card) படிவம் 6ம், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ. ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterpertal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப் பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்62 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், துணைத் தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA-2). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த பணியின் விவரத்திளை மாவட்டக்கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA-2 க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு. முபாரக் அறிவிப்பு!



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (01.10.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:

1. 21.8.2024 நடைபெற்ற மாவட்ட கழக கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுபடி கழக மூத்த முன்னோடிகளுக்கு வழங்கப்பட உள்ள பொற்கிழி பெறுபவர்களின் பட்டியலை நிறைவுசெய்தல்.
2. 29.10.2024 வெளியிடவுள்ள வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து.
3. கழக ஆக்க பணிகள்.

**பா.மு.முபாரக்**
செயலாளர், நீலகிரி மாவட்ட தி.மு.க.



தமிழ்நாட்டின் துணை முதல்வராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின் பேரில், கிழக்கு மாநகர தி.மு.க. சார்பாக இன்று கிழக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமையில் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் இனிப்பு வழங்கி தங்களது மகிழ்வை பொதுமக்களிடம் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் மோகன், ராஜ்முகம்மது, மணிவேல், விஜயகுமார், மாவட்டத் துணைச் செயலாளர் மூக்கன் மாநகர நிர்வாகிகள் சந்திரமோகன், நூர்கான் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி செயிண்ட் ஜான்ஸ் வெஸ்டிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப்குமார். தலைமையில் நடைபெற்ற திருச்சி புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து புத்தகக் கண்காட்சி அரங்கினை பார்வையிட்டு, கலைநிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மண்டலத்தலைவர் மதிவாணன், உதவி ஆட்சியர் அமித்குப்தா, முதுநிலை மண்டல மேலாளர் திருமதி.செந்தில்குமாரி, வருவாய் கோட்டாட்சியர்கள் அருள், தட்சிணாமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அதியமான் கவியரசு, கவிஞர் நந்தலாலா, மாவட்ட நூலக அலுவலர் சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சீனிவாசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பதிப்பகத்தார் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு

# ஒன்றிய, பேரூர் அளவிலான பொறுப்புகளுக்கான விண்ணப்பம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப். 30 -

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, பேரூர் அளவிலான அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விருப்பமுள்ள கழக தோழர்கள் கீழ்கண்ட விதிமுறைகள்படி விண்ணப் பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1.விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு/தொழிற்கல்வி படிப்பு நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும். 2.விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த ஒன்றிய, பேரூர் பகுதியின் வாக்காளர்களாக இருத்தல் வேண்டும். 3.ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் (பெண் உட்பட) நியமிக்கப்படும். 4.விண்ணப்பித்தில் இணைக்கப்பட்டுள்ள QR Code மூலம் பொறியாளர் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப் பிக்க வேண்டும். 5.மண்டல அளவில் விண்ணப்பதாரர்களை அழைத்து நேர்க்காணல் செய்து தேர்வு செய்யப்படும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நமது ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணியின் நிர்வாகிகள் புதிய நிர்வாகிகளுக்கான விண்ணப் பங்களை இணைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாற அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம்

# சிறப்பு பட்டா மாறுதல் முகாம்!

## மண்டலக்குழுத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் அறிவிப்பு!

கோவை, செப். 30 -

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சிறப்பு பட்டா மாறுதல் முகாம். கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் அறிவிப்பு வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் தங்களது சேவைகளை விரைவாக பெறும் வகையில்,

நாளை (01.01.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை ஹர்ஷா மஹால், மசக்காளிபாளையம் கோயமுத்தூர்15 என்ற முகவரியில் மாவட்ட நிர்வாகமும், மாநகராட்சி நிர்வாகமும் இணைந்து நடத்தும் சிறப்பு பட்டா மாறுதல் முகாம் நடக்க உள்ளது.

இந்த சிறப்பு முகாமில், கோயமுத்தூர் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட அனைத்து பொதுமக்களும் கூட்டுப்பட்டா, தனிப் பட்டா, நில அளவை, UDR திருத்தம் TSLR நகல் தொடர்பான மனுக்களை சமர்பித்து, பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஆர்க்காடு பி.என்.சுப்பிரமணியன் 9ஆம் ஆண்டு நினைவேந்தல்!

இராணிப்பேட்டை செப். 30 -

கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண்ணியம் மாறாமல் வாழ்ந்துகாட்டி, கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தவர் ஆற்காடு நகரக் கழக செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

முன்னாள் வேலூர் மாவட்டப்பொருளாளர், முன்னாள் தணிக்கைக்குழு உறுப்பினர், ஆற்காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி.என்.சுப்பிர மணியன் அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நாளை (1.10.2024 )நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மு.நகர செயலாளர், ஆற்காடு நகர அவைத்தலைவர் பி.என். எஸ்.இராஜசேகரன், இராணிப்பேட்டை மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்,

மருத்துவர் பி.என். எஸ்.சரவணன், ஆற்காடு நகரமன்ற துணைத் தலைவர், ஆற்காடு நகராட்சி இராணிப்பேட்டை மாவட்ட மகளிர் அணி துணைத்தலை வர் மருத்துவர் எஸ்.பவளக்கொடி சரவணன் மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மடுவை அ.துரை
### செப்டம்பர் 30 (2020)



**தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.**

**தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**